# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 39 - 2021 ஜுன்**

## புதுப்பிக்கப்பட்ட வானிலை முன்னறிப்பு - ஜுன் - ஜுலை 2021

## விவசாய வானிலை ஆலோசனை

கொழுப்பில் அமைந்துள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் வெளியிட்டுள்ள சமீபத்திய வானிலை முன்னறிவிப்பின் படி, நாட்டின் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, நுவரெலியா (மேற்கு சரிவுகள்), கண்டி (மேற்கு சரிவுகள்), இரத்தினபுரி (மேற்கு பகுதி), காலி மற்றும் மாத்தறைப் போன்ற ஈரவலய மாவட்டங்களில் ஜுன் மாதத்தில் எதிர் வரும் மூன்று வாரங்களிலும் ஜுலை மாதத்திலும் தற்போது நிலவும் தென்மேல் பருவ மழை காரணமாக வழக்கமான சாதாரண மட்டத்தை அண்மித்த அளவில் மழை வீழ்ச்சி கிடைப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது.

உலர், இடை வலயங்களில் அனைத்து மாவட்டங்களிலும் ஜுன், ஜுலை மாதங்களில் சாதாரண மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறும். அதன் படி கீழ் காட்டப்பட்டுள்ள விவசாய சூழலியல் வலயங்களுக்குரிய மழைவீழ்ச்சி எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் குறிப்பாக ஜுன் மாதத்தில் தென்மேல் பருவக் காற்று வீசும் எனில், இடை வலய ஈர வலயத்திற்கு அருகில் அமைந்துள்ள பிரதேசங்களிற்கு எதிர்ப்பார்த்ததை விட அதிக மழை வீழ்ச்சியைப் பெற அதிக வாய்ப்புள்ளது. (உதா:- IL1a விவசாய சூழலியல் வலயம்)



இருப்பினும் தற்போது நிலவும் தென்மேல் பருவ மழை நிலைமை நாட்டின் இயல்பான காலநிலை மற்றும் மழை வீழ்ச்சி முறைக்கு அமைய நாட்டின் உலர், இடை வலயங்களை கணிசமாக பாதிக்காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதனால் ஜுன், ஜுலை மாதங்களிலும் மற்றும் ஆகஸ்ட் மாத இறுதி வரையான காலத்திலும், உலர் மற்றும் இடை வலயங்களுக்கு பெறப்படும் எதிர்ப்பார்த்த பெறுமானத்திற்கு கிட்டிய மழை வீழ்ச்சி அவ் வலயத்தில் செய்கைப் பண்ணப்பட்டுள்ள மேலதிகப் பயிர்களில் நிகழும் ஆவியாகும் நீரின் இழப்பை ஈடு செய்ய போதுமானதாக இருக்காது. இது உரிய

விவசாய காலநிலை வலயங்களில் இக்காலத்தில் நிகழும் சாதாரண நிலைமையாகும். இதனாலேயே நாட்டிலுள்ள ஒரு சில குளங்களைத் தவிர மத்திய, பிரதான நீர்ப்பாசனத் குளங்கள் மற்றும் மகாவலி அமைப்புக்குட்பட்ட நீர்த் தேக்கங்கள் மூலம் சிறு போகத்தில் எதிர்வரும் காலத்தில் எவ்வித தடையுமில்லாமல் பராமரிக்க போதுமானளவு நீர் முதல் காணப்பட்டாலும் இதற்கு முன் மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெளியிடப்பட்ட விவசாய வானிலை ஆலோசனைகள் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட சிபாரிசுகளை அனைத்து விவசாயிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

இருப்பினும் குறிப்பாக ஈர வலயத்தினூடாக செல்லும் தென்மேல் பருவக்காற்று பலவீனமாக இருக்கும் போது அல்லது செயலில் இல்லாத போது ஜூன், ஜூலை மாதங்களில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் பலவீனமான வாய்ப்பு ஏற்படுவதால் அவ்வப் போது மாலையில் ஏற்படும் குறுகிய கால கடும் மழை, பலத்த காற்று என்பவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களை முற்றிலுமாகத் தவிர்க்க முடியாது. எனவே முறையற்ற வடிகால் உள்ள இடங்களில் செய்கைப் பண்ணப்பட்டுள்ள மேலதிக பயிர்ச் செய்கைக்காக மண்ணில் நீரை தற்காலிகமாக தக்கவைத்துக் கொள்வதால் ஏற்படும் பயிர்ச் சேதத்தை தடுக்க வடிகால் வசதிகளை மேம்படுத்துவதற்காக அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**ஜூன், ஜூலை மாதங்களில் எதிர்ப்பார்க்கப்படும் மாதாந்த மழை வீழ்ச்சி**
**(இலங்கை விவசாய சூழலில் வரைப்படத்திட்கு அமைய - 2003)**

| விவசாய சூழல் வலயம் | ஜூன் மி.மீ | ஜூலை மி.மீ |
|---|---|---|
| DL1a | 4.9 | 3.1 |
| DL1b | 6.4 | 3.4 |
| DL1c | 1.1 | 5.8 |
| DL1d | 0.1 | 5.0 |
| DL1e | 0.0 | 6.7 |
| DL1f | 0.4 | 0.3 |
| DL2a | 3.5 | 15.4 |
| DL2b | 30.2 | 9.2 |
| DL3 | 0.7 | 1.9 |
| DL4 | 0.0 | 0.4 |
| DL5 | 28.6 | 3.5 |
| IL1a | 65.8 | 36.1 |
| IL1b | 52.4 | 32.3 |
| IL1c | 12.9 | 18.7 |
| IL2 | 5.7 | 16.7 |
| IL3 | 18.5 | 10.3 |
| IM1a | 19.4 | 27.3 |
| IM1b | 27.7 | 19.4 |
| IM1c | 5.6 | 5.7 |
| IM2a | 77.8 | 55.3 |
| IM2b | 16.2 | 23.0 |
| IM3a | 92.9 | 87.8 |
| IM3b | 39.0 | 27.1 |
| IM3c | 50.1 | 42.7 |

| | | |
|---|---|---|
| IU1 | 83.1 | 73.3 |
| IU2 | 51.1 | 54.1 |
| IU3a | 16.5 | 26.0 |
| IU3b | 22.8 | 20.0 |
| IU3c | 11.7 | 30.0 |
| IU3d | 12.6 | 31.6 |
| IU3e | 17.3 | 22.0 |
| WL1a | 280.5 | 187.7 |
| WL1b | 227.2 | 124.3 |
| WL2a | 181.7 | 120.3 |
| WL2b | 164.3 | 121.9 |
| WL3 | 121.2 | 71.6 |
| WM1a | 293.3 | 312.5 |
| WM1b | 252.8 | 227.4 |
| WM2a | 158.7 | 226.4 |
| WM2b | 143.4 | 160.0 |
| WM3a | 107.0 | 121.3 |
| WM3b | 85.6 | 79.4 |
| WU1a | 344.8 | 287.1 |
| WU2a | 274.3 | 247.6 |
| WU2b | 217.6 | 178.8 |
| WU3 | 137.9 | 127.9 |

**பிரதியாக்கம்** :- கலாநிதி பீ.வீ.ஆர். புன்னியவர்தன - தலைமை விவசாய வானிலை விஞ்ஞானி, விவசாயத் திணைக்களம்

**தமிழாக்கமும், கணணி வடிவமைப்பும் :-** லிசோதா செல்வராஜ்

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர்- தகவல், தொடர்பாடல்)

ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)